
# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 17.05.2021 supeedsam.com supeedsam@gmail.com




## மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் 25 கொரோனா தொற்றாளர்கள் 3 பேர் மரணம்



(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 25 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்தோடு, மூன்று மரணங்களும் பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர்

02 ஆம் பக்கத்தில்...

## முள்ளிவாய்க்கால் நிகழ்வு; மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 பேருக்கு தடை உத்தரவு


(மட்டுநிருபர்)

மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு வணக்கம் நடத்துவதை'தடைசெய்து மட்டக்களப்பு, வாழைச்சேனை, ஏறாவூர் ஆகிய மூன்று நீதவான் நீதிமன்றங்களும் அந்தந்த பகுதி பொலிசார் ஊடாக மட்டக்பளப்பு மாவட்ட தமிழதேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரம், இரா. சாணாக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஷ்வரன், ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் கிழக்குமாகாணசபை உறுப்பினர் இந்திரகுமார் பிரசன்னா.மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவான், இலங்கை

02 ஆம் பக்கத்தில்...

## கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது

### வெளியில் செல்ல அடையாள அட்டை அவசியம்



(காந்தன்)

தற்போது நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள போக்குவரத்து கட்டுப்பாடு அதிகாலை 4 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவலை கட்டுப்பாடுத்துவதற்காக கடந்த வியாழன் நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில்

02 ஆம் பக்கத்தில்...

## கோரோனா 3 ஆவது அலையில் கிழக்கில் 47 மரணங்கள்

கொரோனாவின் 3 ஆவது ஆலையின் பின்பு கிழக்கு மாகாணத்தில் 47 பேர் மரணடைந்துள்ளனர்.

இதில் ஆகக்கூடுதலான மரணங்கள் திருகோணமலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

இதுவரையில் 31 பேர் திருமலை மாவட்டத்தில் கொரோனாவால் மரணமடைந்துள்ளதுடன் மட்டக்களப்பில் 10 பேரும், அம்பாறையில் 05 பேரும் கொரோனா மரணங்களாக பதிவாகியுள்ளது.

கடந்த 7 நாட்களில் 629 பேர் கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பதுடன் இதுவரையில் 3 ஆவது அலைக்கு பின்னர் 2594 பேர் தொற்றுக்குள்ளாயிருந்தனர். இவர்களில் தற்போது 756 பேர் மாத்திரமே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கிழக்கு மக்களும் வீட்டில் விளக்கேற்றவும்

### பா.அரியநேத்திரன் தெரிவிப்பு



(மட்டுநிருபர்)

நாளை 18, ம் திகதி கிழக்கு மாகாண மக்களும் உணர்வு பூர்வமாக தமது வீடுகளில் விளக்கேற்றி முள்ளிவாய்க்காலில் கடந்த 2009,மே, 18 ல் ஆகுதியான மக்களை நினைவு கூருவோம் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சி ஊடக செயலாளரும், பட்டிருப்பு

02 ஆம் பக்கத்தில்...






## அடுத்த இலக்கு வவுனியா கோடாலிபறிச்சான் காட்டுப்பகுதி

(நமது நிருபர்)

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்கு உட்பட்ட நைனாமடு கிராமசேவகர் பிரிவின் கோடாலிபறிச்சான் காட்டுப்பகுதியில் விகாரையுடன் தொடர்புடைய இடிபாடுகள் இருப்பதாக தெரிவித்து வவுனியா பிராந்திய

02 ஆம் பக்கத்தில்...

## நினைவிடத்தை அரசும் இராணுவமும் அழித்தாலும் 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வீடுகளிலிருந்து நினைவேந்துவோம்'

(எஸ் தில்லைநாதன்)

தமிழர் தேசமும் மக்களும் அழிக்கப்பட்ட வரலாறுகளையெல்லாம் தாங்கி நிற்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை அரசும் இராணுவமும் அழித்தாலும் எதிர்வரும் மே 18 அன்று 'முள்ளிவாய்க்கால் படுகொலையை நாம் வாழும் இடங்களிலும், குடியிருக்கும் குடில்களிலும் நினைவுகூருவோம்'என்று

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் துணைத்தலைவருமான மாவை சோ.சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.



02 ஆம் பக்கத்தில்...






## கல்லால் அமைந்த நினைவுத்தூபியை அழிக்கலாம் மனதில் ஆழ பதிந்த நினைவை அழிக்க முடியாது



கல்லாலும் மண்ணாலும் சிமேந்தாலும் அமைந்த நினைவுத்தூபியை அழிக்கலாம் மனதிலும் ஆழ பதிந்த நினைவை அழிக்க முடியாது என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

02 ஆம் பக்கத்தில்...
















## பொத்துவிலில் 3 பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு



பொத்துவில், செல்வவெளி வயல் பகுதியில் உடலில் காயங்களுடன் ஆண் ஒருவர் சடலமாக நேற்று ஞாயிற்

02 ஆம் பக்கத்தில்...

## பொத்துவிலில் 3 பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு

றுக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சந்தேகத்தில் இருவரை கைது செய்துள்ளதாக பொத்துவில் பொலிசார் தெரிவித்தனர்.

பொத்துவில் 15 களப்புகட்டு விச்சு நகரைச் சோந்த 3 பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.நீதவான் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக பொத்துவில் வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்லால் அமைந்த நினைவுத்தூபியை அழிக்கலாம்

'ஒவ்வொரு ஆண்டும் மே 18 என்பது தமிழின அழிப்பின் உச்சம் தொட்ட முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நாளாகும். மனிதர்கள் கொல்லப்பட்டாலும் வரலாறு கொல்லப்பட முடியாதது என்பதை நினைவு கொள்ளும் நாளாகும். 2010ஆம் ஆண்டு முதல் இனவெறி அரசாங்கங்களின் தடைகள் இடையூறுகள் எல்லாவற்றையும் மீறியும் நாம் எல்லோரும் பல்வேறு வழிகளில் இந்நாளை நினைவு கூர்ந்தே வந்திருக்கிறோம். இதன் ஒரு அடையாளமாகவே முள்ளிவாய்க்கால் மண்ணில் எளிமையான நினைவுத்தூபி நிறுவப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வுகளை தடுத்து வந்த அரசாங்கம் இப்பொழுது அந்த நினைவு தூபியையும் இரவோடு இரவாக இடித்தழித்துவிட்டு அப்படி ஒரு தேவை இராணுவத்துக்கு இல்லை என்கிறது.

முள்ளிவாய்க்கால் பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமித்து நின்று கொண்டு நினைவுத்தூபி அழித்தது பற்றி தமக்கு தெரியாது என்கின்றனர்.

கல்லாலும் மண்ணாலும் சிமேந்தாலும் அமைந்த நினைவுத்தூபியை அழிக்கலாம். ஆனால் கல்லுப்போல ஒவ்வொரு தமிழன் மனதிலும் ஆழ பதிந்த நினைவை, வரலாற்றை எமது இனம் இருக்கும் வரை அழிக்க முடியாது . இதனை இனவாத சிங்கள தேசம் புரிந்த கொள்ள வேண்டும்.

நிகழ்கால அரசாங்கம் பதவிக்கு வந்த சென்ற ஆண்டு முதல் கட்டவிழ்த்துவிடப்பட்ட கடும்போக்குத் தனம் எம் இனத்தை தளர்வடையச் செய்யமாட்டாது என்பதை சென்ற ஆண்டிலும் நிருபித்தோம்.

அதேபோன்று இந்த வருடமும் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு எமது இல்லங்கள் ஒவ்வொன்றிலும் பகிரங்கமாக தீபங்கள் ஏற்றி அநியாமாக கொல்லப்பட்ட எமது உறவுகள் அனைவரையும் நினைவு கூர்ந்து வணங்கி எமது தணியாத விடுதலை உணர்வை வெளிப்படுத்தி நிற்போம்' என தெரிவித்தார்.




## நினைவிடத்தை அரசும் இராணுவமும் அழித்தாலும்

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் தேசத்தினதும் இனத்தினதும் விடுதலைக்காகவும், தங்களைத் தாங்களே ஆளுவதற்காகவும் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகின்றனர்.

கடந்த ஏழு தசாப்த காலங்களில் இந்தப் போராட்டங்களினாலும், அரசுகள் ஏவிவிட்ட இனக்கலவரங்களினாலும், இறுதிப் போராலும் பல இலட்சம் மக்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளனர்; அழிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் காலகட்டங்களில் அரசுகளின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினாலும், பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்கள மயமாக்கலினாலும் தமிழ் மக்களின் குடிப்பரம்பல் பெருவீழ்ச்சியடைந்து வருகின்றது. அத்துடன் தமிழ் மக்களின் மொழி, பண்பாடு, நாகரிகம் என்பனவும், தமிழர் தேசத்தினதும், மக்களினதும் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டது.

அம்மக்கள் அஞ்சலி செய்ய, கண்ணீர் விட்டழுது ஆறுதல் பெற ஆன்மக் கடனாற்றவுள்ள நினைவிடங்களும், சின்னங்களும் அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் ஆன்மத்தையே அழிக்கும் செயற்பாடே கடந்த 12.05.2021 நள்ளிரவில் இராணுவம் சூழ்ந்திருக்க முள்ளிவாய்க்கால் நினைவிடத்திலும் நடந்தேறியிருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தை இராணுவத்தின் பாதுகாப்புடன் அரசு சிதைத்துள்ளது.

அந்த நினைவிடத்தில் மே 18ஆம் நாள் புதிய நினைவுக்கல் நிலைநிறுத்தவும், அந்நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெறவும் ஒழுங்கமைப்புக்கள் இடம்பெற்றன. இந்தநிலையில், புதிய நினைவுக்கல்லும் அங்கிருந்து இராணுவம் சூழ்ந்திருக்க அகற்றப்பட்டிருக்கின்றது. அந்த நினைவுக்கல் இப்போது எங்கே? இலங்கை அரசு இத்தனைக்கும் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும்.

தமிழர் தேசமும் மக்களும் அழிக்கப்பட்ட வரலாறுகளையெல்லாம் தாங்கி நிற்கின்றது முள்ளிவாய்க்கால் நினைவிடம். இத்தகைய வரலாற்றைப் பிரதிபலிக்கும் முள்ளிவாய்க்கால் அத்திபாரத்திலிருந்துதான் தமிழ்த் தேசிய இனம் விடுதலை வரலாற்றைப் படைக்கப் போகின்றது. அந்த வரலாற்றுத் தீர்மானத்தை எதிர்வரும் மே 18 அன்று நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிறைவேற்றுவோம். இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்று சர்வதேசமயப்பட்டிருப்பதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி கிறிஸ்தவ ஆயர்கள் கொரோனா வைரஸ் தீவிரத்தையும் கடந்து அர்த்தமுள்ள ஆனால் காத்திரமான அறிக்கையின் மூலம் தமிழ்த் தேச மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளமை எழுச்சிகொள்ள வைக்கின்றது.

கொரோனா வைரஸ் பல திரிபுகளாகப் பரவி தீவிரமாக உயிர்களைப் பலியெடுத்து வருகின்றது. எமது பிரதேசங்களிலும் பல இலட்சம் மக்களைப் இனப்போரில் பலிகொடுத்துவிட்ட நிலையிலும் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கும், உயிர்களைக் காக்கவும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் கட்டுப்பாடுகளை ஏற்று நாமே நம்மைப் பாதுகாக்கும் வழிவகைகளைப் பின்பற்ற வேண்டிய நிலையில் உள்ளோம்.

எனவே, மே 18 அன்று இதுவரை அடைந்த அவலங்கள், துயரங்களை நெஞ்சில் இருத்தி இலட்சியத் தாகத்தை இதயத்தில் நிறைத்து வாழும் இடங்களிலும், குடியிருக்கும் குடில்களிலும் எமது உறவுகளை நினைவு கூர்ந்து மாலை 6 மணிக்கு மணி ஒலி எழுப்பிச் சுடரேற்றி விளக்கேற்றி திடசங்கற்பத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவலைகளைப் பாரெல்லாம் பரப்பி நிற்போம் என அழைப்பு விடுக்கின்றோம்' என்றுள்ளது.

## சிறுவனை சீண்டிய 'புடையன்'



சிறுவனைப் புடையன் பாம்பு தீண்டிய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு முன்னால் உள்ள பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைப் புடையன்பாம்பு தீண்டியதில் சிறுவன் மயக்க முற்ற நிலையில், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு பாம்பு கடிக்கு இலக்காகிய சிறுவன் திருகோணமலைகம்பகொட்ட பகுதியைச் சேர்ந்த தேவிந்த பிரசாந் (10வயது) எனவும் தெரியவருகின்றது.

குறித்த சிறுவன் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த இலக்கு வவுனியா கோடாலிபறிச்சான் காட்டுப்பகுதி

தொல்பொருட் திணைக்கள அதிகாரிகளால் அண்மையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நைனாமடுவில் அமைந்துள்ள ஒதுக்கப்பட்ட காட்டுப்பகுதியில் சுமார் 8 பாறைக் கோபுரங்களைக் கொண்ட ஒரு கட்டிட அமைப்பு, பாறைத்துருவ அடித்தளத்தைக் கொண்ட அமைப்புகள், 5 மீட்டர் உயரமுள்ள தூண் ஆகிய இடிபாடுகளை பார்வையிட்ட இராணுவத்தினர் இது தொடர்பாக தொல்பொருள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர். அதற்கமைய வவுனியா மாவட்ட தொல்பொருட் திணைக்கள அதிகாரிகளால் குறித்த பகுதி அண்மையில் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக குறித்த பகுதியின் கிராம சேவகருக்கோ, அல்லது கிராம மக்களிற்கோ எந்த தகவலும் தெரியப்படுத்தப்படவில்லை.

அங்கு பௌத்தவிகாரையுடன் தொடர்புடைய தொல்பொருள் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருட் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளதுடன், குறித்த பகுதி வர்த்தமானி அறிவுப்புச்செய்யப்பட்டு, தொல்பொருள் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் ஆக்கிரமிப்பை ஏற்படுத்தியுள்ள தொல்பொருட் திணைக்களம் தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசமான நைனாமடுவில் மீண்டும் ஒரு ஆக்கிரமிப்பினை முன்னெடுப்பதற்கு தயாராகி வருகின்றமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது வெளியில் செல்ல அடையாள அட்டை அவசியம்

போக்குவரத்து தடை விதிக்கப்பட்டிருந்தது. இன்று அதிகாலையுடன் போக்குவரத்து கட்டுப்பாடு நீக்கப்பட்ட போதிலும் நாளாந்தம் இரவு 11 மணி முதல் 4 மணி வரையில் போக்குவரத்து கட்டுப்பாடு விதிக்கப்படுவதுடன் மாகாணங்களுக்கு இடையில் தொடர்ந்து போக்குவரத்து கட்டுப்பாடு நீடிக்கும் என பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து கட்டுப்பாடு நீக்கப்பட்ட போதிலும் கடமைக்கு செல்வதை தவிர வேறு நோக்கங்களுக்காக அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலேயே வீட்டை விட்டு வெளியேற முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் அடையாள அட்டை இலக்கத்தின் அடிப்படையில் வீட்டிற்கு அருகில் உள்ள விற்பனை நிலையங்களுக்கு செல்வதற்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்படி அடையாள அட்டையின் இறுதி இலக்கம் 1, 3, 5, 7, 9 ஆக இருக்குமாக இருந்தால் ஒற்றை இலக்க திகதிகளிலும், 2, 4, 6, 8, 0 ஆகிய இலக்கங்களை கொண்டிருந்தால் இரட்டை இலக்க திகதிகளிலும் வெளியில் செல்ல முடியும்.

இதனால் வெளியில் செல்லும் நேரங்களில் அடையாள அட்டையை கையில் வைத்திருக்க வேண்டியது அவசிமாகும்.

அவ்வாறாக தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் கடவுச்சீட்டையோ அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தையோ பயன்படுத்த முடியும். அவையும் இல்லையென்றால் தமது கிராம சேவகரிடம் தமது அடையாள அட்டை தொடர்பான ஆவணமொன்றை பெற்றுக்கொள்வது அவசிமாகும்.

இந்த நடைமுறை மே 31 ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும் என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.




## கிழக்கு மக்களும் வீட்டில் விளக்கேற்றவும் பா.அரியநேத்திரன் தெரிவிப்பு

தொகுதி இலங்கைத்தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் 12,வது ஆண்டு நினைவு தொடர்பாக மேலும் ஊடகங்களுக்கு கருத்து கூறுகையில்.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த இலட்சக்கணக்கான மக்களின் நினைவுகூரும் தினம் மே.18 ம்திகதியாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இக்கட்டான காலங்களில் எல்லாம் முள்ளி வாய்க்கால் நினைவு வணக்கத்தை 2010, மே,18,ம திகதி தொடக்கம் ஒவ்வொரு வருடங்களும் தமிழ்தேசிய் கூட்டமைப்பினராகிய்நாம் உணர்வு பூர்வமாக ஆலயங்களில் பூசை வழிபாடுகளுடனும், கத்தோலிக்க தேவாலயத்தில் ஆராதனை வணக்கத்துடனும் தொடர்ச்சியாக செய்து வந்தமை யாவரும் அறிந்த ஒன்றே.

இந்தவருடமும் அதே போல் தற்போதய கொரோணா நோய் தாக்கத்தை கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளை பேணி நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான சில ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

இந்நிலையில் தமிழ்தேசிய கூட்டமைப்பை சேர்ந்த எமது உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாலிபர் அணி தலைவர்கள் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மகளீர்அணி உறுப்பினர்கள் என 22,பேருக்கு நீதவான் நீதுமன்றங்கள் மூலமாக தடை உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

நீதிவான் நீதுமன்ற தடை உத்தரவுகளை மதித்தும், தற்போதய கொரோணா நோய் தாக்கத்தை கருத்துல் கொண்டும் நாளை மே18, ம் திகதி மாலை 6, மணிக்கு அல்லது பொருத்தமான ஒரு நேரத்தில் அனைவரைம் இல்லங்கள் தொறும் விளக்கேற்றி உயிர்நீத்த உறவுகளை நினைந்து இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்துமாறு வேண்டுகின்றோம.

2010,ம் ஆண்டு வடகிழக்கில் முதலாம் ஆண்டுமுள்ளிவாய்க்கால் நினைவு தினம் நடத்த முடியாத மிகவும் பயங்கர அச்சுறுத்தல் நிலவியபொது மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை 'ரீ தான்தோன்றீஷ்வர ஆலயத்திலும், மட்டக்களப்பு மாமாங்கேஷ்வர ஆலயத்திலும் மிகவும் உணர்வு பூர்வமாக முள்ளி வாய்க்கால் நினைவு வணக்கம் தமிழ்தேசி கூட்டமைப்பால் செய்யப்பட்டதையும் குறிப்பிட்டார்.

## முள்ளிவாய்க்கால் நிகழ்வு; மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 பேருக்கு தடை உத்தரவு

தமிழரசு கட்சி வாலிபர் இணிதலைவர் லோ.திவாகரன், மற்றும் கி.சேயோன் உட்பட 22,பேருக்கு தடை உத்தரவு கடிதங்களை அவர்களுடைய வீடுகளுக்கு சென்று கையளித்துள்ளனர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பதினொரு வருடங்களாக முள்ளிவாய்க்கால் நினைவு வணக்கம் பல இக்கட்டான காலத்திலும் தமிழ்தேசிய கூட்டமைப்பினால் உணர்வுபூர்வமாக நினைவு கூறப்பட்டவந்த நிலையில் இவ்வருடம் நீதிமன்றதடைஉத்தரவு மூலம் பொது இடங்களில் செய்ய முடியாது உள்ளதாகவும் எனினும் வீடுகளில் கட்டாயம் அனைவரும் விளக்கேற்றி இதனை கடைப்பிடிக்புமறு'முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சி ஊடகசெயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.




## மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் 25 கொரோனா தொற்றாளர்கள் 3 பேர் மரணம்

நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 15 பேரும் மட்டக்களப்பு சுகாதார பிரிவினை சேர்ந்த 06 பேரும் ஆரையம்பதி மற்றும் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா இருவருமாக 25 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று மரணங்கள் பதிவாகியுள்ளன.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒன்றும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் இரண்டுமாக மூன்று மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 1426 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 19 மரணங்களும் பதிவாகியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65





SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt



உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு, கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923
n.uthayakumar1981@gmail.com



SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா -வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# வடமராட்சி வல்லை கடல் நீரேரியில் இறால் குஞ்சு சந்தைப்படுத்தல்

( எஸ் தில்லைநாதன்)



வடமராட்சி வல்லை கடல் நீரேரியில் வளர்ப்பதற்கு விடப்பட்ட 40 இலட்சம் இறால் குஞ்சுகள் பருவமடைந்ததினால் அவற்றைப்பிடித்து சந்தைப்படுத்த முதல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் கரணவாய் மண்டான் நீரேரிக் கரையில் நடைபெபெறவுள்ளது.கடற்றொழில் மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்வை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

ஈ பி. டி .பி. யின் யாழ். மாவட்ட உதவி நிர்வாகப் பொறுப்பாளரும் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளருமான ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.இந்நிகழ்வில் அமைச்சின் அதிகாரிகள் கரவெட்டிப் பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

வல்லைக் கடல் நீரேரியில் மண்டான் அச்சுவேலி வடக்கு தொண்டைமானாறு ஆகிய கரையோரங்களில் வைத்து கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் 40 இலட்சம் இறால் குஞ்சுகளை மீனவர்களுக்கு வழங்கி அதனை நீரேரியில் விடும் நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தார்.

அவ்வாறு விடப்பட்ட மீன்குஞ்சுகள் பருவமடைந்துள்ளன.அவற்றை மீன்வர்கள் பிடித்து சந்தைப்படுத்துவதற்கென நிகழ்வு இடம் பெறுகிறது.

இந்த இறால் வளர்ப்புத்திட்டத்தினால் வடமராட்சி பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்து வருகிறது.

# சூடுபத்தின சேனை பகுதியில் 156 உடல்கள் அடக்கம்

(ந.குகதர்சன்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சூடுபத்தினசேனை பகுதியில் சனிக்கிழமை மாத்திரம் பத்தொன்பது உடல்கள் அடக்கம் செய்யப்பட்டதுடன், இதுவரைக்கும் நூற்றி ஐம்பத்தாறு உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்த நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

சூடுபத்தினசேனையில் கொரோனாவில் உயிரிழந்தவர்களின் நூற்றி ஐம்பத்தாறு உடல்கள் அடக்கம் செய்யப்பட்டது. இதில் இரண்டு வெளிநாட்டவர்கள், பௌத்த மதத்தவர் ஒருவர், இந்து மதத்தவர் மூன்று, கிறிஸ்தவ மதத்தவர் ஆறு பேரின் உடல்கள் அடங்களாக நூற்றி நாற்பத்தி நான்கு இஸ்லாம் மதத்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக மரணிப்பவர்களின் தொகை அதிகரித்து காணப்படுகின்றது. புதுவருட கொத்தனிக்கு பிறகு தற்போது நோன்பு பெருநாளுக்கு பின்னரான வைரஸ் தாக்கமும் உருவாகலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் சனிக்கிழமை ஓட்டமாவடி பிரதேசத்தில் மாத்திரம் அதிக கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக ஓட்டமாவடி பிரதேசத்தில் எவரும் உயிரிழக்காத வகையில் விழிப்புடன் செயற்பட வேண்டும். எனவே முன்னர் அரம்பிக்கப்பட்ட கிராம மட்ட குழுவினரை மீண்டும் உருவாக்க வேண்டும். இதன் மூலம் வேலைத் திட்டங்களை மேற்கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வெளியில் இருந்து நோன்பு காலத்தில் யாரும் வருகை தந்திருந்தால் அவர்களை எமக்கு தெரியப்படுத்தி அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தும் பட்சத்திலும் எமது பகுதியினை காப்பாற்ற முடியும். எனவே எமது பிரதேசத்தில் கொரோனா தாக்கம் அதிகரிக்காத வகையில் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றேன் என்றார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதர் ஏ.எல்.நௌபர், கிராம சேவை அதிகாரிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அன்டிஜன் பரிசோதனைகள் பெறப்பட்டு அதன் மூலம் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் வீதிகள் மாத்திரம் தனிமைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும், அத்தோடு வியாபார நிலையங்களின் உள்ளவர்களுக்கும் திங்கட்கிழமை பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரிக்காத வகையில் அனைத்து தரப்பினரும் சுகாதார திணைக்களத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், வெளி இடங்களில் இருந்து வருகை தந்தால் சுகாதார திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி பிரதேசத்தினை காப்பாற்ற முன்வருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# இன்று கிழக்கில் அம்மன் திருக்குளிர்த்திச்சடங்கு ஆரம்பம்

## பக்தர்களுக்கு தடை: நேர்த்திக்கும் தடை

(காரைதீவு நிருபர்)



கிழக்கில் அம்மன் திருக்குளிர்த்தி சடங்கு கல்யாணக்கால் வெட்டல் மற்றும் கடல்தீர்த்தம் எடுத்துவரல் போன்ற பாரம்பரிய சடங்குகளுடன் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.கொரோனா தாக்கத்தால் இம்முறை பக்தர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் .அத்துடன் நேர்த்திகளுக்கும் அனுமதியில்லை.

வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டிதொட்டியெல்லாம் பறையொலிச்சத்தமும் குழலோசையும் கேட்கும். வைகாசிப்பொங்கல்எனும் பாரம்பரிய சடங்கு உணர்வுபூர்வமாக பயபக்தியுடன் இடம்பெறும்.

அந்தவகையில் இலங்கையில் வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனாலய வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு இன்று திங்கள் மாலை ஆரம்பமாகின்றது.

இன்ளறு 17ஆம் திகதி திங்கட்கிழமை திருக்கதவுதிறந்து கல்யாணக்கால் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய் அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையவிருக்கிறது.

அண்மைக்காலமாக கொரோனா தீநுண்மியின் தாக்கம் படுவேகமாக அதிகரித்துவருவதனால் வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனாலய வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கின்போது பக்தர்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆக ஆலயநிருவாகிகள் பத்துப்பேருக்கு மட்டுமே வழமைபோல பாரம்பரிய சடங்கு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

கற்பூரச்சட்டி ஏந்துதல் அங்கப்பிரதட்சணம் செய்தல் காவடி எடுத்தல் முதலான சகல நேர்த்திகள் செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

பாரம்பரிய சடங்கு என்பதால் அதை கிரமமாக அனைத்து சம்பிரதாயங்களையும் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பதிவுசெய்யப்பட்ட ஆலயநிருவாகிகள் பத்துப்பேர் மாத்திரம் சடங்குகாலத்தில் ஆலயத்தில் பூரணமாகத் தங்கியிருந்து அதனைச்செய்யவேண்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கடைகளுக்கும் ஏனைய ஊர்வலம் மற்றும் வெளிவிடயங்களுக்கும் தடை செய்யப்பட்டுள்ளது.பக்தர்கள் வீட்டிலிருந்தவாறே அம்மனை வணங்கலாம் எனக்கூறப்பட்டுள்ளது. பொதுமக்கள் அன்போடு ஒத்துழைக்கவேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

# அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் பாதுகாப்பு மற்றும் சுகாதார தரப்பினருக்கு இடைஞ்சல் விளைவிப்பது கூடாத செயலாகும்

## மாநகர சபை முதல்வர்



(நூருல் ஹுதா உமர்)

நாங்கள் நோற்ற நோன்பு நோயெதிர்ப்பு சக்தியாக எங்களுக்கு அமைந்துள்ளது. இந்த காலக்கட்டத்தில் இனவாதமாக, பிரதேச வாதமாக கருத்துக்களை தெரிவிப்பதை விடுத்து மக்கள் மிகக்கவனமாக நடந்துகொள்ள வேண்டும்.

சுகாதார வழிமுறைகளை இறுக்கமாக கடைபிடிக்க வேண்டியது நாம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். கடந்த 15 மாதங்களுக்கு மேலாக இதற்காக நாங்கள் போராடி மக்களின் நலனில் எப்போதும் கரிசனையுடன் முன்னெடுப்புக்களை செய்து வருகிறோம். அதனை முறையாக செய்யாத பலருக்கும் எதிராக பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள்.

இந்த காலகட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு உதவ அரசாங்கம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாலும் நாங்களும் ஒரு பொறிமுறையை உருவாக்க ஆலோசித்து வருகிறோம் என அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அஹமட் ஸஹி தெரிவித்தார். நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல்வர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

பயணக்கட்டுப்பாட்டை விதித்து மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் அறிவுறுத்தியும் அதையெல்லாம் மீறி சிலர் தான்தோன்றி தனமாக நடந்துகொள்வதும், அர்ப்பணிப்புடன் இக்காலகட்டத்தில் சேவையாற்றும் பாதுகாப்பு மற்றும் சுகாதார தரப்பினருக்கு இடைஞ்சல் விளைவிப்பதும் கூடாத செயலாகும். கொரோனாவை வெற்றிகொள்ள எல்லோரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். சுகாதார வழிமுறைகளை பேணாது வீணாக சுற்றித்திரிந்து நோய்க்காவிகளாக மாறி வீட்டில் உள்ள முதியவர்கள், குழந்தைகள், நோயாளிகளுக்கு தொற்றை நாம் வழங்க கூடாது. நாம் இந்த தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசுக்கும், பாதுகாப்பு படைக்கும், சுகாதார துறைக்கும் நமது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அக்கரைப்பற்று மக்களுக்கு நிறையவே விழிப்புணர்வு அறிவித்தல்களை முன்வைத்து வருகிறோம். அக்கரைப்பற்று உட்பட எமது எல்லா ஊர் மக்களும் கொரோனாவின் முதலாம், இரண்டாம் அலையில் நிறையவே பாடங்களை கற்றுள்ளனர். ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது பரிசோதனையில் எங்களுக்கு நிறையவே நல்ல செய்திகளே கிட்டியுள்ளது. இருந்தாலும் மக்களை தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தி வருகிறோம். எங்களின் பிரதேசத்தில் தொடர்ந்தும் பரிசோதனைகள் நடைபெற்றுக்கொண்டே தான் இருக்கிறது.

அக்கரைப்பற்றின் மாநகர சபை, பிரதேச சபை, பொலிஸ், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பாதுகாப்பு படையினர், அரசகாரியாலயங்கள் என நாங்கள் சகலரும் ஒன்றிணைந்து இந்த பிரதேசத்தில் மக்களை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறோம். இருந்தாலும் இலங்கை இந்தியாவை அடுத்து மிகப்பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் நாங்கள் இறுக்கமாக சுகாதார வழிமுறைகளை பின்பற்ற வேண்டியுள்ளது. சிவப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு செல்வதில் இருந்து நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மக்களை காப்பாற்ற அரச இயந்திரம் சிறந்தமுறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அக்கறை செலுத்துவதிலும் பார்க்க மக்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்தவே அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்கிறது என்றார்.








# கிண்ணியாவில் 12 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொவிட்19 தாக்கம் காரணமாக அசாதாரண சூழ் நிலையை கருத்திற் கொண்டு கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல கிராம சேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டன.

கிண்ணியாவில் சுமார் 12 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்ட நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வீதிகளில் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் வெறிச்சோடி காணப்படுகிறது. மக்களை தங்களது வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது

மருந்தகங்கள் மாத்திரம் திறக்கப்பட்டுள்ளது இது தவிர விவசாயிகள் தங்களது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வெளியில் செல்ல அனுமதி பத்திரம் கிண்ணியா பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்படவுள்ளது. முடக்கப்பட்ட பகுதிக்குள் அத்தியவசிய தேவைகளை நடமாடும் சேவை மூலமாக மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# துறைமுக நகர சட்டமூலத்தை அவசரமாக சமர்ப்பிப்பதன் பின்னணி என்ன?

(அப்துல்சலாம் யாசீம்)



கொரோனா அச்சத்துக்கு மத்தியில் துறைமுக நகர சட்டமூலத்தை அவசரமாக சமர்ப்பிப்பது சீனாவின் அழுத்தத்தினாலா என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வி எழுப்பினார்.

நேற்று காலை கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

நாட்டில் பல முதன்மையான பிரச்சினைகள் உள்ள நிலையில் ராஜபக்ஷ அரசு இந்தவாரத்தில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை அவசர அவசரமாக பாராளுமன்றத்துக்கு கொண்டுவருவதில் பலத்த சந்தேகங்கள் உள்ளன.

கொரோனா அபாயம் இன்று நாட்டில் தலைவிரித்தாடுகின்றது. அதனை ஒழிக்க இருந்த சந்தர்ப்பத்தை தனது மௌட்டீக செயற்பாட்டால் இந்த அரசு உதாசீனம் செய்தது. இனவாத அரசியலுக்கு தீனி போட்டு சமூகத்தில் கொவிட் வளரகளம் அமைத்துக் கொடுத்தது. கடைசியில் தன்னை நம்பிய 69 இலட்சம் பேரை மட்டுமன்றி முழு நாட்டையும் மரண பீதியில் வைத்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை அவசர அவசரமாக நிறைவேற்றிக்கொள்ள எத்தனிக்கிறது.

20க்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்பிக்களுக்கு இப்தாரில் இதுபற்றி பேசப்பட்டதாக கதைகள் வருகின்றன. அவர்களது ஆதரவும் இதற்கு கிடைக்க கூடும். கொரோனா நோயாளிகளுக்கு சிகிட்சை அளிக்கும் வசதிகளை பெறவே இவ்வாறு கைதூக்கினோம் என்று நாளை அவர்கள் கூறினாலும் ஆச்சர்யமில்லை.

நாட்டின் பாதுகாப்பு , சுதந்திரம் உள்ளிட்ட விடயங்களோடு தொடர்பு பட்ட இந்த சட்டமூலம் பலத்த விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும் பெற்றுள்ள நிலையில் சீனாவின் அழுத்தம் காரணமாகவா அவசர அவசரமாக நிறைவேற்றப்பட போகின்றது என்ற சந்தேகம் பரவலாக உள்ளது.

இந்த அரசாங்கத்தில் அரிசி உட்பட உணவுப்பொருட்களுக்குப் போன விலையேற்றத்தைப் பாருங்கள்.

அதுபோல கழிவறை கொமோட் ஒன்றின் விலை 19500 இலிருந்து ஒரேயடியாக 35000 ரூபாவுக்கு விலை கூட்டப்பட்டுள்ளது. இந்த நாட்டின் பிரஜைகளை இந்த அரசு ஒழுங்காக உண்டு களிக்கவோ ஒழுங்காக உண்டதைக் கழிக்கவோ முடியாத நிலைமைக்கு தள்ளியுள்ளது. இந்த நிலைக்கும் அப்பால் இதுபோன்ற சட்ட மூலங்களை மக்களது அவல நிலைமைகளை சாதகமாக்கி சட்டமாக்குவதன் மூலம் மக்கள் முதுகில் அடிமைச் சாசனத்தை வரைந்து இந்த அரசு இலங்கையர்களை எதிர்காலத்தில் அந்நியர்களுக்கு அடிமைகளாக்க முனைகிறது.

தமது அரசியல் இருப்பையும் பிழைப்பையும் பாதுகாக்க அரச தரப்பும் அதற்கு ஆதரவளிக்கும் சுய இலாபங்களை குறித்து மட்டுமே சிந்திக்கும் கூட்டமும் எடுக்கும் இந்த முயற்சியினால் முழு நாட்டு மக்களும் பாதிக்கப்பட போகின்றார்கள்.

எனவே இந்த அசாதாரண சூழலில் இத்தகைய சட்டமூலத்தை கொண்டு வருவதை பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகள் என்றவகையில் கடுமையாக எதிர்க்கின்றோம். இந்த அடிமைச்சாசன அரசியலுக்கு பதிலாக மக்களது உயிரச்சம் நீங்க காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றோம்.

# எம்மோடே இருப்பர்

மகிந்த காலத்தில்
மூச்சுவிட முடியவில்லை
முள்ளிவாய்கால் பற்றி.

இருப்பினும்,
வழிபாட்டு முறையில்
ஆங்காங்கு
நினைவுகூர்ந்தோம்
விளம்பரம் இன்றி.

நல்லாட்சிக் காலத்தில்
நாம் விரும்பியவாறெல்லாம்
நினைவுகூர்ந்தோம்.

பல்கலையிலும்,
முள்ளிவாய்காலிலும்
பகிரங்கமாகவே
நினைவுச்சின்னம்
அமைத்தோம்.

பல்லாயிரவர் கூடித்
துக்கம் பகிர்ந்தோம்.

தென்னக மக்களோ,
சீருடை இராணுவமோ
ஒன்றும் பறையவில்லை,
மேலாக,
அரசியலாரும்
நியாயப்படுத் தினர்
அவர்களும் நமது
மக்கள்தான் என்று.

கோத்தா வந்ததும்
கூத்து நடக்குது
கொரோனா அதற்குப்
பந்தல் அமைக்குது.

சின்னத்தை ஏனையா
சிதைத்தீர்?
என்னத்தை இதனால்
வெளிக்காட்டுகின்றீர்?

நாகரிகம் பற்றி
நாம் பேசுகின்றோம்.
அது இருந்திருந்தால்
இதுவரை வந்திருக்குமா?

அன்று,
ஒருதரப்பார் போட்ட
களரியில் ஏறி
எத்தனை பேர்தான் கூத்தடித்
தீர்கள்?

ஒன்றாய் இருப்போம்
ஒருகுரல் கொடுப்போம்
என்றார் பெரியவர்
ஏற்றுக்கொண் டீர்களா?

வெண்ணெய் திரண்டு
வந்திட்ட போது
கண்ணைக் கட்டிநின்று
கல்லால் அடித்தீர்.

நமக்குள்ளே நாம்
பலப்பட் டிருந்தால்
அவர்கள் பக்கமும்
பலப்பட் டிருக்குமே!

அப்படி ஏதும்
நடவா திருப்பினும்
அசையார் அவரெனும்
செய்திபோ யிருக்குமே!

ஜனாதிபதித் தேர்தல்
இலங்கைப் படம்
போல்
பொதுத்தேர்தல் படமும்
வெளிப்பட்டிருக்குமே!

ஞானம் வரவில்லை
நமக்கின்னும் என்றால்
வானம் வந்தா
வழிகாட்டும் நமக்கு!

பாவம் மக்கள்,
மக்கு இராணுவம்,
இப்படிச் செய்தால்
எம்மோடே இருப்பர் .

- அண்ணாதாசன் -

# பாராளுமன்ற தெரிவுக்குழுவில் மு.கா சார்பிலான எந்த உறுப்பினரும் நியமிக்கப்படாமை ஏன்?

## கேள்வியெழுப்புகிறார் ஆரிப் சம்சுதீன்



(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம்களின் எதிர்கால சந்ததிகளின் தலையெழுத்தை தீர்மானிக்க வேண்டி தேர்தல் சீர்திருத்தம் செய்ய வேண்டிய விடயம் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் சீர்திருத்த பாராளுமன்ற தெரிவுக்குழுவில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான எந்தவித உறுப்பினரும் நியமிக்கப்படாமை எங்களுக்கு இப்போது பிணக்காக இருக்கிறது. பொதுஜன பெரமுன சார்பில் அமைச்சர் அலி சப்ரியும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் முன்னாள் அமைச்சர் கபீர் காஸிம் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் ஐவர் இருந்தும் அதில் ஒருவர் கூட இடம்பெறவில்லை என்பது எங்களுக்கு மிகப்பெரும் கவலையை உண்டாக்கியுள்ளது. இதற்கு என்ன காரணம் என்றால் எங்களின் எம்.பிக்களில் நால்வர் அரசுடன் இணைந்து சுகபோகங்களை அனுபவிப்பதும் தலைவர் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டிருப்பதும் தான் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

1984/6 காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி முக்கிய விடயங்களை பேச கூட்டிய அனைத்து கட்சி கூட்டத்தில் முஸ்லிங்கள் சார்பில் பேச யாரும் அனுமதிக்கப்படாமையினாலையே தனித்துவமான எங்களின் பயணம் ஆரம்பமாக வேண்டி இருந்தது. தனித்துவமாக பயணிக்கும் மனோ கணேசன் அவரின் கூட்டமைப்பின் சார்பில் அந்த குழுவில் இடம் பெற்றுள்ளார். ஒழுக்கமாக, ஒரே நிலைப்பாட்டில் அவர்கள் இருப்பதனால் அந்த வாய்ப்பு அவர்களுக்கு கிட்டியுள்ளது. தமிழ் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அவர்கள், மலையக மக்களுக்காக ஜீவன் தொண்டமான் ஆகியோரும் இடம்பெற்றுள்ளார்கள், ஜே.வி.பியின் மூன்று எம்.பிக்களில் இரண்டு பேர் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளனர். எங்களுக்கான வாய்ப்பு இல்லாமல் போனது கவலையளிக்கிறது.

அமைச்சர் அலிசப்ரியும், முன்னாள் அமைச்சர் கபீர் காஸிமும் முஸ்லிங்களின் நிலைப்பாட்டை சரியாக எடுத்துரைப்பார்களா எனும் அச்சம் எங்களிடமிருக்கிறது. ஏன் முஸ்லிம் காங்கிரஸ் இந்த தேர்தல் சீர்திருத்த பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறவில்லை எனும் விளக்கத்தை எங்களின் கட்சி செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பரிடம் வினவ உள்ளேன்.

மேலும் சாணக்கியனின் அண்மையை உரை தொடர்பில் ஊடகவியலாளரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவளித்துக்கொண்டிருந்த போது சாணக்கியன் முஸ்லிங்களுக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் பேசிக்கொண்டிருந்தார். தைரியமாக குரல் எழுப்பிய சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுமந்திரன் ஆகியோரும் குரல் கொடுத்தார்கள். அவர்களை முஸ்லிங்களாகிய நாங்கள் மதிக்கிறோம். கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பிலான கருத்து பிழையாக இருந்தாலும் அதனை நேரடியாக தொடர்புகொண்டு எந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன என்பதை அறிய உள்ளேன். கல்முனை உப பிரதேச செயலகம் என்பது கிளறினால் அரசியல் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்- முஸ்லிம் உறவை பிரிக்கும் மையப்புள்ளியாக இது இருந்து வருகிறது

தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றாக இணைந்து அரசியல் செய்ய வேண்டும், ஒன்றாக இணைந்து பயணிக்க வேண்டும். அவர்களுக்கிடையில் புரிந்துணர்வை உண்டாக்க பாடுபடுகிறோம். புரிந்துணர்வின்மையினால் அது கரையான் போன்று இருந்துவருகிறது. பெருந்தேசிய வாதமும் இதற்கு எதிராக உள்ளது. கல்முனை தமிழ் பிரதேச செயலகம் என்பது வியாழேந்திரன், கருணா, ஹரீஸ் போன்றவர்கள் இதுவரை எடுத்துக்கொண்ட பிரச்சினையாக இருந்து வந்தது. அதனை இப்போது சாணக்கியன், சுமந்திரன், முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த விக்னேஸ்வரன் ஆகியோரும் இப்போது கையிலெடுத்திருப்பது ஆச்சரியமளிக்கிறது.

தமிழ்- முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழ வேண்டும் என்று கூறிக்கொண்டு மறுமுனையில் கல்முனையில் பிரிந்திருந்திருக்க வேண்டும் என்று கேட்பது எவ்வகையில் நியாயம். 60 வீதமான மக்களுக்கு 30 வீதமான நிலப்பரப்பும், 37 வீதமான மக்களுக்கு 60 வீதமான நிலப்பரப்பும் கேட்பது அநீதியான, இனவாத ரீதியான நயவஞ்சக போக்கினை காட்டுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ் முஸ்லிம் உறவை பற்றி பேசிக்கொண்டு மறுமுனையில் அதற்கு எதிராக செயற்படுவது நியாயமில்லை. கல்முனை பல்லினம் வாழும் நகரம். அதனை அப்படியே பாதுகாப்பதா? இல்லை குரங்கின் கையில் அகப்பட்ட பூ மாலையாக கல்முனையை மாற்றுவதா? இல்லை யாருக்கும் நன்மை பயக்காத வகையில் கல்முனையை மாற்றுவதா எனும் கேள்வி எமக்கு எழுகிறது.

# இராணுவம், சுகாதார அமைச்சு,மாநகரசபை, தீயணைப்பு பிரிவு இணைந்து மட்டு.நகரில் பாரிய கொரோனா தொற்று நீக்கல்

(ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக வேகமாகப் பரவும் கொரோனா மூன்றாவது அலையிலிருந்து மக்களைப் பாதுகாக்க இராணுவத்தினர் சுகாதார அமைச்சுடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட 231வது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் சுகாதார அமைச்சு, மாநகரசபை, தீயணைப்பு பிரிவு மற்றும் பொலிசாரும் இணைந்து நேற்று காலை மட்டக்களப்பு நகரில் பாரிய கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையம் தனியார் பஸ் தரிப்பு நிலையம் உட்பட நகரின் கேந்திர நிலையங்களில் முழுமையாக கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.



231வது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் விஜித ஹெட்டியாராச்சி மாநகர ஆணையாளர் எஸ்.தயாபரன் பொதுச் சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தீயணைப்பு படை பொறுப்திகாரி வி.பிதீபன் பாபு உட்பட படை பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.




# தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையைத் தீவிரமாக்குகின்றது அரசு



அரசு தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை தீவிரமாக்குகின்றது என்பதையே நினைவித்தூபி அழிப்பு விடயம் எடுத்தியம்புகின்றது. அரசின் இத்தகைய செயற்பாடுகளை உலக நாடுகளும் உன்னிப்பாகவே அவதானித்துக் கொண்டிருக்கின்றன என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அழிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியினை உடைத்ததன் ஊடாக இந்த அரசு தன்னுடைய கொடூரத்தை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதுடன், தமிழ் மக்கள் மனதில் மேலும் வெறுப்பினை ஏற்படுத்துகின்றது.

எமது தமிழ் மக்கள் அவர்களது உடமைகளை இழந்து உறவுகளான கணவன், மனைவி, சகோதரர், பிள்ளைகளை இழந்து தவித்து அந்த நினைவுகளை மறக்க முடியாத சூழ்நிலையிலும் இன்றுவரை அதற்கான நியாயம் கிடைக்கவில்லை.

இருப்பினும் அவர்களை நினைவுகூர்ந்து தங்கள் துயரங்களைப் பகிர்வதற்கும் இந்த அரசின் கீழ் முடியாமல் இருக்கின்றது. அவர்களது ஆத்ம சாந்திக்காக அஞ்சலி செலுத்தி மனநிம்மதி அடைவதற்கும் இடமளிக்காது தற்போது கொரோணவைச் சாட்டி அவற்றைத் தடுத்து வந்ததும் இல்லாமல், தற்போது நினைவுச்சின்னங்களை அழிக்கும் செயற்பாடுகளிலும் இறங்கியுள்ளது. இவற்றினூடாக அரசு தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையைத் தீவிரமாக்குகின்றது என்றே பொருள்படுகின்றது.

# அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் "உதிரம் கொடுத்து உயிர் காக்க முன்வருவோம்"

## இரத்ததான நிகழ்வு



(சர்ஜுன் லாபீர், யூ.கே. காலித்தீன்)

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதி நிலமையினைக் கருத்திற்கொண்டு றைடர் சைக்கிலிங் கழகத்தின் ஏற்பாட்டில் "உதிரம் கொடுத்து உயிர் காக்க முன்வருவோம்" எனும் தொனிப்பொருளில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நேற்று (16) இரத்த வங்கியில் டாக்டர் ஐ. எல். டில்ராஸ் வானு தலைமையில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

உதிரம் கொடுத்து உயிர் காக்க முன்வருவோம் எனும் தொனிப்பொருளில் இடம் பெற்ற நிகழ்வானது நாட்டில் நிலவுகின்ற கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பயணக் கட்டுபாடு நிலவும் தருணத்திலும் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாட்டினை கருத்திற் கொண்டு கோவிட் 19 சட்ட திட்டங்களுக்குட்பட்ட வகையில் சமூக இடைவெளி முறைமைகளை பின்பற்றி இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வைத்தியர்கள், தாதியர்கள், இளைஞ்சர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் மும்முரமாக ஆர்வம் காட்டியதை காணக்கூடியதாக இருந்தது.

# கொரோனா மூன்றாம் அலையை சாதாரணமாக இடைபோட வேண்டாம்

## இறுக்கமாக சுகாதார வழிமுறைகளை பின்பற்றுங்கள் – அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம்

(நூருல் ஹுதா உமர்)

கொரோனா காலங்களில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதில் சில தவறுகளை மக்கள் விடுகிறார்கள். சில முக்கிய இடங்களில் சமூக இடைவெளியை பின்பற்றுவதிலும், சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பதிலும் மக்கள் அசட்டையாக இருக்கிறர்கள் என்பதுடன் கொரோனா ஒழிப்புக்காக பாடுபடுகின்ற நாம் எமக்கு அருகில் வாழும் வசதி குறைந்த தேவையுடையவர்களை இந்த காலகட்டத்தில் இனங்கண்டு அவர்களுக்கு தாமாக முன்வந்து உதவும் மனநிலையை உருவாக்கி கொள்ளவேண்டும் என அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த கால இரண்டு கொரோனா அலைகளிலும் நாங்கள் பெரிதாக பாதிக்கப்படாமல் இருந்தாலும் இப்போது இலங்கையில் வேகமாக பரவி வரும் மூன்றாவது அலை மிக மோசமான பாதிப்புக்களை உண்டாக்கும் தன்மை கொண்டது என்பதை சுகாதாரத்துறையினர் எமக்கு அறிவுறுத்தி வருகின்றனர். இதனுடைய பக்கவிளைவுகளை மக்கள் அறிந்து, விளங்கியவர்களாக நடக்க வேண்டும் எனும் அறிவுறுத்தலை பள்ளிவாசல்கள் ஊடாகவும், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பொலிஸ், பாதுகாப்பு படையினர், மாநகர சபை ஆகியோரின் உதவியுடனும் மக்களுக்கு நாங்கள் அறிவித்து வருகிறோம்.

இந்த அறிவித்தல்களை ஏற்று பெரும்பாலான மக்கள் முகக்கவசங்களை அணிந்து, சமூக இடைவெளிகளை பின்பற்றி, கைகளை கழுவி சுகாதார



வழிமுறைகளை செயற்படுத்தி பாதுகாப்பான முறையில் தமது குடும்பங்களையும், பிள்ளைகளையும் காத்து வருகிறார்கள். ஆனாலும் சில தவறுகளை மக்கள் விடாமலும் இல்லை. சில முக்கிய இடங்களில் சமூக இடைவெளியை பின்பற்றுவதிலும் சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பதிலும் மக்கள் அசட்டையாக இருக்கிறர்கள். இந்த விடயத்தில் மக்கள் உரியமுறையில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கையர்களாக ஒன்றிணைந்து கொரோனாவை வெல்ல வேண்டிய தேவை எமக்கிருக்கிறது.

அதேநேரம் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் முடக்கப்பட்ட நேரங்களில் அரசாங்கம் சில உதவிகளை ஏழை மக்களுக்கு செய்யும். ஆனால் தேவையுடைய எல்லா மக்களுக்கும் அரசின் உதவிகள் கிடைக்கிறதா? என்ற கேள்விக்கு பதில் இல்லை என்றே வரும். கொரோனா ஒழிப்புக்காக பாடுபடுகின்ற நாம் எமக்கு அருகில் வாழும் வசதி குறைந்த தேவையுடையவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தாமாக முன்வந்து உதவும் மனநிலையை உருவாக்கி கொள்ளவேண்டும் என்பதுடன் ஒற்றுமையாக புரிந்துணர்வுடன் செயலாற்றி எமது நாட்டை கொரோனாவிலிருந்து பாதுகாக்க சகலரும் உதவுவோம் என்று தெரிவித்தார்.

# தமிழ் முஸ்லீம் அரசியல் வாதிகள் இணைந்து மக்களுக்கு அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும்!

(பாறுக் ஷிஹான்)

தமிழ் முஸ்லீம் அரசியல் வாதிகள் இணைந்து மக்களுக்கு அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் கல்முனை பிரதேச செயலக பிரச்சினை சாய்ந்தமருது நகர சபை பிரச்சினை நீண்ட காலமாக தொடர்ந்து வருகின்றது என கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எல். அன்ஸார் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சனிக்கிழமை நடாத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் சமகால அரசியல் தொடர்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

கல்முனை பிரதேச செயலக பிரச்சினை சாய்ந்தமருது நகர சபை பிரச்சினை நீண்ட காலமாக தொடர்ந்து வருகின்றது.சாய்ந்தமருது நகர சபையை பெறுவதற்காக பலரும் போராடிக்கொண்டு இருக்கின்றார்கள்.இதற்கு ஒருவர் மாத்திரம் உரித்தானவர்கள் அல்லர் பலரும் செயற்படுகின்றனர்.



பொதுவாக மக்கள் இருக்கின்றார்கள்.கல்முனை மக்களுக்கு பாதிப்பில்லாதவாறு சாய்ந்தமருதுவிற்கு சபை கிடைக்க வேண்டும் என்பதில் பலரும் உறுதியாக இருக்கின்றார்கள்.இது தான் நியாயம் தர்மம்.இந்த அடிப்படையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் அவர்கள் எங்களுடைய முஸ்லீம் பகுதிகளுக்கு சபை கிடைக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் பேசியிருந்தார்.

அத்துடன் சாய்ந்தமருது பள்ளிவாசல் நிர்வாகத்தினரையும் இது தொடர்பில் சந்தித்திருந்தார். அதனை சுட்டிக்காட்டியவர்களும் உள்ளனர்.அவ்வாறு சுட்டிக்காட்டியவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிடலாமா என்ற யோசனைக்கும் வந்துள்ளார்கள்.ஆகவே இது தான் யதார்த்தம்.பிரிந்து எதனையும் சாதிக்க முடியாது. தமிழ் முஸ்லீம் அரசியல் வாதிகள் இணைந்து மக்களுக்கு அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும்.இதனை ஒரு மேசையில் இருந்து பேசி தமிழ் மக்களுக்கான பிரச்சினையை தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கான பிரச்சினையை முஸ்லீம் மக்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இதே போன்று தான் கல்முனை பிரதேச செயலக விடயத்தை கோடீஸ்வரன் அவர்கள் பேசியிருந்தார்.அதற்கு பாடுபட்டும் இருந்தார்.இதற்கு சுமூகமாக எல்லைத்திட்டத்தை வகுக்கின்ற போது அது தமிழ் மக்களுக்கான பிரதேச செயலகமாக அமையாது.இப்பிரதேச செயலகத்தை அண்டிய பகுதிகளில் மருதமுனை நற்பிட்டிமுனை மக்களும் இருக்கின்றார்கள். ஆகவே எனக்கு இன ரீதியான பிரதேச செயலகம் வருவதற்கு உடன்பாடில்லை என்பதே எனது கருத்தாகும் என குறிப்பிட்டார்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# ஜூன் முதல் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு!




(காரைதீவு சகா)

நாட்டில் இயங்கும் பதிவுசெய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பி ஜயசுந்தர நிதி அமைச்சின் செயலாளர் எஸ்இஆர். ஆட்டிகலவுக்கு அது தொடர்பில் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அதற்கான நிதி மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி ஆரம்ப பாடசாலை ஆரம்பக் கல்வி பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் கல்விச்சேவை இராஜாங்க அமைச்சுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நிதி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# 3 நாட்களாக தொடர் கடையடைப்பு பாரிய நஷ்டத்தில் வியாபாரிகள்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

மூன்று நாட்கள் தொடர் கடையடைப்பு காரணமாக வியாபாரத்தில் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம்களின் பெருநாள் தினத்தை நம்பி விற்பனைக்காக பொருட்களை கொள்வனவு செய்த போதும் கடைகளை திறக்க அரசாங்கம் கட்டுப்பாடு விதித்ததில் வியாபாரத்தில் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் மேலும் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள பழவகைகள் மற்றும் மரக்கறி கடைகளின் வியாபாரிகளே கூடுதல் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த பொருட்களை விற்பனை செய்ய முடியாமலும் அதனை பாதுகாக்க முடியாமலும் பழுதடைந்த நிலையில் வீசியுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Best Regional Printer For the Year 2013
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com